இனிமையான குழந்தைகளே! ஆத்ம அபிமானி ஆகுங்கள் நான் ஆத்மா ஆவேன் சரீரம் அல்ல. இது தான் முதல் பாடம் ஆகும். இதே பாடத்தை அனைவருக்கும் நல்ல முறையில் கற்பியுங்கள்.

கேள்வி: ஞானம் கூறுவதற்கான முறை என்ன? எந்த விதியுடன் ஞானம் கூற வேண்டும்?

பதில்: ஞானத்தின் விஷயங்களை மிகவும் சந்தோஷமாக கூறுங்கள். வேண்டா வெறுப்புடன் அல்ல. நீங்கள் உங்களுக்குள் அமர்ந்து ஞான விவாதம் செய்யுங்கள்; ஞானத்தை சிந்தனை செய்யுங்கள். பின்னர் அனைவருக்கும் கூறுங்கள். தன்னை ஆத்மா என்று உணர்ந்து பின் ஆத்மா விற்கு கூறினீர்கள் என்றால் கேட்பவர்களுக்கும் குஷி ஏற்படும்.

ஓம் சாந்தி, ஆத்ம அபிமானி அல்லது தேகி அபிமானி ஆகி அமருங்கள் என்று தந்தை கூறுகிறார். ஏனெனில், ஆத்மாவிற்குத்தான் நல்லது அல்லது தீய சம்ஸ்காரங்கள் நிரப்பப்படுகின்றன. எல்லா வற்றின் பிரபாவம் ஆத்மா மீது ஏற்படுகிறது. ஆத்மா தான் பதீதமானது என்று கூறப்படுகிறது;. பதீத ஆத்மா என்று கூறப்படுகிறது எனவே அவசியம் ஜீவ ஆத்மாவாகத்தான் இருக்கும். ஆத்மா சரீரத்துடன் கூட தான் இருக்கும். முதன் முதலாவதான விஷயம் ஆத்மா ஆகி அமருங்கள் என்று கூறுகிறார். தான் சரீரம் அல்ல, ஆத்மா என்று உணர்ந்து அமருங்கள். ஆத்மா தான் இந்த உறுப்பு களை இயக்குகிறது. அடிக்கடி தன்னை ஆத்மா என்று உணருவதால் பரமாத்மா நினைவிற்கு வருவார். தேகம் நினைவிற்கு வந்தால் தேகத்தின் தந்தை நினைவிற்கு வருவார். எனவே ஆத்ம அபிமானி ஆகுங்கள் என்று தந்தை கூறுகிறார். தந்தை படிப்பிக்கிறார். இது முதல் பாடம் ஆகும். ஆத்மாவாகிய நீங்கள் அவினாஷி ஆவீர்கள் சரீரம் அழியக் கூடியது ஆகும். நான் ஆத்மா ஆவேன் என்ற இந்த முதல் வார்த்தையை நினைவு செய்யவில்லை என்றால் அரைகுறையாக இருந்து விடுவீர்கள். நான் ஆத்மா ஆவேன் சரீரம் அல்ல என்ற இந்த வார்த்தையை இச்சமயம் தந்தை படிப்பிக்கிறார். இதற்கு முன்பு யாருமே கற்பித்து இருக்கவில்லை தந்தை வந்திருப்பதே ஆத்ம அபிமானியாக ஆக்கி ஞானம் அளிப்பதற்கு. ஹே, ஆத்மா! பதீதமாக உள்ளாய் என்ற முதல் ஞானம் அளிக்கிறார். ஏனெனில், இதுவோ பழைய உலகம். கண்காட்சியில் கூட குழந்தைகளாகிய நீங்கள் அநேகருக்குப் புரிய வைக்கிறீர்கள். கேள்விகள் எல்லாம் எழுப்புகிறார்கள் என்றால் பகலில் ஓய்வு நேரம் கிடைக்கும் பொழுது தங்களுக்குள் சிந்தித்துக் கொள்ள வேண்டும். சமாசாரம் கேட்க வேண்டும் யார் என்னென்ன கேள்விகள் கேட்டார்கள், நாம் எப்படி புரிய வைத்தோம் என்று. பிறகு அவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும். பின் அது பற்றி இப்படி அல்ல, இப்படி புரிய வைக்க வேண்டும் என்று விளக்க வேண்டும். புரிய வைப்பதற்கான யுக்தி அனைவருடையதும் ஒன்று போல இருக்காது. அடிப்படை விஷயமாவது தன்னை ஆத்மா என்று உணருகிறீர்களா இல்லை தேகம் என்றா? இரண்டு தந்தையும் அனைவருக்கும் அவசியம் இருக்கிறார்கள். யாரெல்லாம் தேகதாரிகளோ அவர்களுக்கு லௌகீக தந்தையும் இருக்கிறார், பரலோக தந்தையும் இருக்கிறார். எல்லைக்குட்பட்ட தந்தையோ பொதுவாக இருக்கிறார். இங்கு உங்களுக்கு எல்லையில்லாத தந்தை கிடைத்துள்ளார். அவர் ஆத்மாக்களாகிய நமக்கு வந்து புரிய வைக்கிறார். அவர்

ஒருவர் தான் தந்தையும் ஆவார். ஆசிரியரும் ஆவார் குருவும் ஆவார். இதை உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும். நீங்கள் எவரொருவருக்கும் புரிய வைக்கிறீர்கள் என்றால் என்ன வெல்லாம் உங்களிடம் கேள்வி கேட்கிறார்களோ அது பற்றி தங்களுக்குள் அமர்ந்து கலந்துரையாட வேண்டும். புத்திசாலியாக இருப்பவர்கள் கூட அமர வேண்டும். உங்களுக்கு பகலில் நேரம் கிடைக் கிறது. அப்படி இன்றி உணவு உட்கொண்டபின் உறக்கத்தின் போதை ஏற்படுவது அல்ல. யார் அதிகமாக உணவு உட்கொள்கிறார்களோ அவர்களுக்கு உறக்கத்தின் சோம்பல் ஏற்படுகிறது. பகலில் வகுப்பு நடத்திக் கொள்ள வேண்டும். இன்னார் இந்த கேள்வி கேட்டார். நாம் இதுபோல பதிலளித்தோம். கேள்விகளோ வித விதமாகக் கேட்பார்கள். அவர்களுக்கு தேவை சரியான பதில். எனவே தன்னைப் பார்க்க வேண்டும் அவர்களை கவரும் விதத்தில் கூறினோமா? திருப்தி ஆகியிருக்குமா? இல்லாவிட்டால் திருத்தங்கள் எடுத்து வர வேண்டும். யார் புத்திசாலிகளாக இருக்கிறார்களோ அவர்களும் அமர வேண்டும். அப்படி இன்றி உணவு உட்கொண்ட உடனேயே சீக்கிரம் தூக்கம் வந்து விடுவது நல்லது. தேவதைகள் உணவு மிகவும் குறைவாக உட்கொள்வார் கள் ஏனெனில் குஷி இருக்கிறது அல்லவா? எனவே குஷி போன்ற சத்துணவு எதுவும் இல்லை என்று கூறப்படுகிறது. குழந்தைகளாகிய உங்களுக்கு அளவற்ற குஷி இருக்க வேண்டும். பிராமணர் ஆவதில் மிகுந்த குஷி உள்ளது. பிராமணர் ஆவது எப்பொழுது என்றால் அவர்களுக்கு குஷி கிடைக்கும் பொழுது தான். தேவதைகளுக்கு மகிழ்ச்சி இருக்கிறது அல்லவா? ஏனெனில் அவர்களிடம் செல்வம் அரண்மனை ஆகிய அனைத்துமே உள்ளது. எனவே அவர்களுக்கு குஷியே போதுமானது. குஷியில் உணவு கூட மிகவும் குறைவாக உட்கொள்வார்கள். இதுவும் ஒரு நியமம் ஆகும். அதிகமாக உட்கொள்பவர்களுக்கு அதிகமாக உறக்கம் வரும். யாருக்கு தூக்கத்தின் போதை இருக்குமோ அவர்களால் எவருக்கும் புரிய வைக்கவும் முடியாது. வலுக்கட்டாயமாக விளக்க முற்படுவார்கள். இந்த ஞானத்தின் விஷயங்களோ மிகுந்த குஷியுடன் கேட்க வேண்டும் மற்றும் கூற வேண்டும். புரிய வைப்பதும் சுலபமாக இருக்கும்.

மூல விஷயம் தந்தையின் அறிமுகம் அளிப்பது ஆகும். பிரம்மாவை யாருக்குமே தெரியாது. பிரஜாபிதா பிரம்மா இருக்கிறார் ஏராளமான பிரஜைகள் இருக்கிறார்கள். இவர் எப்படி பிரஜாபிதா பிரம்மா ஆவார் என்பது பற்றி மிகவும் நல்ல முறையில் விளக்க வேண்டும். இவரது அனேக ஜன்மங்களின் கடைசி ஜன்மத்தின் கடைசியில் வானபிரஸ்த நிலையில் நான் பிரவேசம் செய்கிறேன் என்று தந்தை புரிய வைத்துள்ளார். இல்லா விட்டால் இரதம் எங்கிருந்து வரும். சிவ பாபாவிற்குத்தான் இரதமே பாடப்பட்டுள்ளது. இரதத்தில் எப்படி வருகிறார் என்பதில் குழம்புகிறார் கள். இரதமோ அவசியம் வேண்டும். கிருஷ்ணராக இருக்க முடியாது. எனவே அவசியம் பிரம்மா மூலமாக புரிய வைப்பார். மேலிருந்தபடியே ஒன்றும் பேசமாட்டார். பிரம்மா எங்கிருந்து வந்தார்? யார் முழுமையாக 84 பிறவிகள் எடுத்துள்ளாரோ அவருக்குள் பிரவேசம் செய்கிறேன் என்று தந்தை கூறி உள்ளார். அவருக்கே அது பற்றி தெரியாது. நான் கூறுகிறேன். கிருஷ்ணருக்கோ இரதத்தின் அவசியம் இல்லை. கிருஷ்ணர் என்று கூறுவதால் பகீரதன் மறைந்து போய்விடுவார். கிருஷ்ணரை பகீரதன் என்று கூறப்படுவதில்லை. அவருடைய முதல் பிறவி இளவரசனுடையது ஆகும். எனவே குழந்தைகள் உள்ளுக்குள் ஞான மனனம் செய்ய வேண்டும்.

சாஸ்திரங்களில் எழுதப்பட்டிருக்கும் விஷயங்கள் அல்ல என்பதையோ குழந்தைகள் அறிந்துள்ளார்கள். மற்றபடி ஞானத்தை கடைந்து கலசம் இலட்சுமிக்கு அளிக்கப்பட்டது என்ற விஷயமோ சரிதான். அவர் பின் மற்றவர்களுக்கு அமிருதம் பருகச் செய்தார் அப்பொழுது தான் சுவர்க்க வாசல் திறக்கும். ஆனால் பரம்பிரதா பரமாத்மாவிற்கோ ஞான மனனம் செய்ய வேண்டிய அவசியமே கிடையாது. அவரோ விதை ரூபம் ஆவார். அவரிடம் ஞானம் உள்ளது. அவரே அறிந்திருக்கிறார். நீங்களும் அறிந்திருந் தீர்கள். இப்பொழுது இவற்றை நல்ல முறையில் புரிய வைப்பது அவசியம் ஆகும். புரிந்து கொள்ளாமல் தேவதா பதவியை எப்படி அடைவார்கள். ஆத்மாக்களுக்கு புத்துணர்வூட்டுவதற்காக தந்தை புரிய வைக்கிறார். மற்றவர் களோ ஒன்றுமே அறியாமல் உள்ளார்கள். தந்தை வந்து புரிய வைக்கிறார். இப்பொழுது உங்களது நங்கூரம் பக்தி மார்க்கத்திலிருந்து விலகி விட்டது. இப்பொழுது ஞான மார்க்கத்தில் சென்றுள்ளது. நான் உங்களுக்கு அளிக்கும் ஞானம் மறைந்து போய் விடுகிறது என்று தந்தை கூறுகிறார். ஒருவர் நிராகார தந்தை மற்றொருவர் சாகார தந்தை. புரிய வைப்பதோ நன்றாகவே இருக்கிறது. ஆனால் மாயை எப்பேர்ப்பட்டது என்றால் கவர்ச்சியில் எடுத்து வந்து அழுக்காக ஆக்கிவிடுகிறது. பதீதமாக ஆகிவிடுகிறார்கள். குழந்தைகளே, நீங்கள் காமச் சிதையில் ஏறி முற்றிலும் சுடுகாட்டில் வந்து விட்டுள்ளீர்கள் என்று தந்தை கூறுகிறார். மீண்டும் இங்கு தான் அவசியம் பரிஸ்தான் சொர்க்கம் வரும். அரைகல்பம் பரிஸ்தான் இருக்கும். பின் அரை கல்பம் கப்ரிஸ்தான் (சுடுகாடு) இருக்கும். இப்பொழுது அனைவருமே சுடுகாடு போய் சேர வேண்டி உள்ளது. ஏணிப்படி மீதும் நல்ல முறையில் நீங்கள் புரிய வைக்க முடியும். இது இருப்பதே பதீத இராஜ்யமாக. இது அவசியம் அழியப் போகிறது. இந்த பூமியில் இப்பொழுது சுடுகாடு உள்ளது. பிறகு இதே பூமியில் மாற்றம் ஏற்பட்டு விடும். அதாவது இரும்பு யுகத்திலிருந்து தங்க யுக உலகமாக ஆகி விடும். பிறகு 2 கலை குறைந்து விடும். தத்துவங் களின் கலைகள் கூட குறைந்து கொண்டே போகும்பொழுது உபத்திரவங்களை உண்டாக்குகின்றன. நீங்கள் அனைவருக்கும் நல்ல முறையில் விளக்குகிறீர்கள். புரிந்து கொள்வதில்லை என்றால் சோழிக்குச் சமம். எந்த மதிப்பும் இல்லை. இந்த மதிப்போ தந்தை வந்து கூறுகிறார். வைரம் போன்ற பிறவி என்றும் பாடப்பட்டுள்ளது. நீங்கள் கூட முதலில் தந்தையை அறியாமல் இருந்தீர்கள். நீங்கள் சோழி போல இருந்தீர்கள். இப்பொழுது தந்தை வந்து வைரம் போல ஆக்குகின்றார். பின் சோழி போல ஏன் ஆகிவிடுகிறீர்கள்? நீங்கள் ஈஸ்வரிய புதல்வர்கள் ஆவீர்கள் அல்லவா? ஆத்மாக்கள் மற்றும் பரமாத்மா வெகுகாலம் பிரிந்திருந்தார்கள் என்ற பாடல் கூட உள்ளது. அங்கு சாந்தி தாமத்தில் இருக்கும்பொழுது அந்த சந்திப்பில் எந்த ஒரு நன்மையும் ஆவதில்லை. அதுவோ தூய்மை அல்லது அமைதியின் இடம் மட்டுமே ஆகும். இங்கோ நீங்கள் ஜீவ ஆத்மாக்கள் ஆவீர்கள் மற்றும் பரமாத்மா தந்தைக்கு தனக்கென்று சரீரம் இல்லை. அவர் சரீரத்தை தாரணை செய்து குழந்தைகளாகிய உங்களுக்குப் படிப்பிக்கிறார். நீங்கள் தந்தையை அறிந்துள்ளீர்கள் மற்றும் பாபா என்று கூறுகிறீர்கள். தந்தை ஓ, மகனே! என்று கூறுவார். லௌகீக தந்தை கூட குழந்தை குட்டிகளே! வாருங்கள்; நான் உங்களுக்கு தின்பண்டம் கொடுக்கிறேன் என்று கூறுவார் அல்லவா? உடனே எல்லாரும் ஓடுவார்கள் இந்த தந்தையும் கூறுகிறார். குழந்தைகளே! வாருங்கள். நான் உங்களை வைகுண்டத்திற்கு எஜமானராக ஆக்குகிறேன் என்றால் அவசியம் எல்லாரும் ஓடி வருவார்கள். பதீதர்களாகிய எங்களை பாவனமாக

ஆக்கி பாவன உலகம் உலகிற்கு எஜமானராக ஆக்க வாருங்கள் என்று கூப்பிடவும் செய்கிறார்கள். இப்பொழுது நிச்சயம் இருக்கிறது என்றால் ஏற்றுக் கொள்ள வேண்டும். கூப்பிட்டதும் குழந்தைகள் தான், நான் வருவதும் குழந்தைகளுக்காகத் தான். குழந்தைகளிடம் தான் கூறுகிறார், நீங்கள் கூப்பிட்டீர்கள். இப்பொழுது நான் வந்துள்ளேன். பதீத பாவனர் என்றும் தந்தைக்குத்தான் கூறுகிறார்கள் அல்லவா? கங்கை ஆகியவற்றின் தண்ணீரால் நீங்கள் பாவனம் ஆக முடியாது. அரை கல்பம் நீங்கள் தவறாக சென்றுள்ளீர்கள். பகவானைத் தேடுகிறீர்கள் ஆனால் யாருடைய அறிவிற்கும் எட்டுவதில்லை. தந்தை ஹே, குழந்தைகளே! என்று கூறுகிறார். எனவே அதே உல்லாசத்துடன் குழந்தைகளிடமிருந்தும் ஹே, பாபா! என்று வெளிப்பட வேண்டும். ஆனால் அவ்வளவு உல்லாசத்துடன் வெளிப்படுவது இல்லை. இது தேக அபிமானம் என்று கூறப்படுகிறது. தேஹீ (ஆத்ம) அபிமானி அல்ல. இப்பொழுது நீங்கள் தந்தைக்கு முன்னால் அமர்ந்துள்ளீர்கள். எல்லையில்லாத தந்தையை நினைவு செய்வதால் எல்லையில்லாத அரசாட்சி கூட அவசியம் நினைவிற்கு வரும். அப்பேர்ப்பட்ட தந்தைக்கு எவ்வளவு அன்புடன் பதில் கூற வேண்டும்! நீங்கள் அழைத்ததன் காரணமாக தந்தை வந்துள்ளார். நாடகப்படி ஒரு நிமிடம் கூட முன்னால் பின்னால் ஆக முடியாது. ஓ, தந்தையே! கருணை புரியுங்கள்; விடுவியுங்கள். நாங்கள் அனைவரும் இராவணனின் சங்கிலிகளில் கட்டுண்டு இருக்கிறோம் நீங்கள் எங்களுக்கு வழி காட்டி ஆகுங்கள். என்று எல்லாரும் கூறுகிறார்கள். எனவே தந்தை வழிகாட்டியும் ஆகிறார். ஓ, லிபரேட்டர்! ஓ கைடு வந்து எங்களுக்கு வழிகாட்டி ஆகுங்கள் என்று அனைவரும் அவரைக் கூப்பிடுகிறார்கள். எங்களையும் கூட அழைத்து செல்லுங்கள். இப்பொழுது நீங்கள் சங்கமத்தில் நின்றுள்ளீர்கள். தந்தை சத்யுகத்தின் ஸ்தாபனை செய்து கொண்டிருக்கிறார். இப்பொழுது கலியுகம் ஆகும். கோடிக்கணக்கான மனிதர்கள் உள்ளார்கள். சத்யுகத்திலோ குறைவான தேவி தேவதைகள் மட்டுமே இருந்தார்கள். எனவே அவசியம் விநாசம் ஆகி இருக்கக் கூடும். அதுவும் முன்னால் நின்றுள்ளது. அதற்கான பாடல் உள்ளது. விஞ்ஞானத்தின் அகங்காரம் உடையவர்கள் எவ்வளவு புத்தியைப் பயன்படுத்தி அறிவு எடுத்து வந்து கொண்டே இருக்கிறார்கள். அவர்கள் யாதவ சம்பிரதாயத்தினர். மீண்டும் சரித்திரம் திரும்ப நடைபெறும். இப்பொழுதோ சத்யுகத்தின் சரித்திரம் திரும்ப நடைபெறும்.

நாம் புது உலகத்தில் உயர்ந்த பதவி அடைய முயற்சி செய்து கொண்டிருக்கிறோம் என்பதை நீங்கள் அறிந்துள்ளீர்கள். அவசியம் பவித்திரம் (தூய்மை) ஆக வேண்டும். இந்த பதீத உலகத்தின் விநாசம் அவசியம் ஏற்படும் என்று நீங்கள் புரிய வைக்கிறீர்கள். குழந்தைகள் ஆகியோர் நீங்கள் இருக்கும் பொழுது இருப்பார்கள் என்று கூற முடியாது. வாரிசும் யாரும் ஆக மாட்டார்கள். திருமணம் ஆகியவையும் செய்ய முடியாது. அதிகமான நாட்கள் கழிந்து விட்டது. மீதி கொஞ்சம் தான் உள்ளது. சிறிதளவே நேரம் உள்ளது. அதற்கும் கணக்கு உள்ளது. இதற்கு முன்பு இவ்வாறு கூறிக் கொண்டு இருக்கவில்லை. இப்பொழுது காலம் குறைவாக உள்ளது. யாரெல்லாம் முன்பு சரீரம் விட்டு சென்றிருக்கிறார்களோ, அவர்கள் நம்பர் பிரகாரம் முயற்சியின் படி பிறவி எடுத்துள்ளார்கள். ஒரு சிலர் இங்கு கூட வந்திருக்கக் கூடும். இங்கிருந்து பிரிந்து சென்றிருப்பவர் என்று பார்க்கும் பொழுது தென்படுகிறது. அவர்களுக்கு ஞானம் இன்றி ஆனந்தம் வராது. தாய் தந்தையரிடமும் நாங்களோ இங்கு செல்வோம்

என்று கூறுவார்கள். இதுவோ சுலபமாகப் புரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் ஆகும். வினாசம் அவசியம் ஏற்படத்தான் போகிறது. யுத்தத்திற் கான ஏற்பாடுகளை பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். பாதி செலவோ அவர்களுடையது; இந்த யுத்தத்தின் சாமான்களிலேயே ஈடுபடுத்தப்பட்டு விடுகிறது. விமானம் ஆகியவை எப்படி அமைக் கிறார்கள்! கூறுகிறார்கள் வீட்டில் அமர்ந்தபடியே எல்லாம் அழிந்து போய் விடும். அப்பேர்ப்பட்ட பொருட்கள் எல்லாம் தயாரிக்கிறார்கள். ஏனெனில் ஆஸ்பத்திரிகள் ஆகியவை இருக்காது. நாடகத்தில் இது கூட தந்தையின் குறிப்புக்கள் கிடைத்தபடி உள்ளன. அதுவும் நாடகத்தில் பொருந்தி உள்ளது. நோய் வாய்ப்பட்டு குற்றுயிராக இருந்து விடக்கூடாதே என்று நினைக் கிறார்கள். இறப்பதோ அனைவரும் அவசியம் இறந்து தான் ஆக வேண்டும். இராமனும் போக வேண்டும், இராவணனும் போக வேண்டும். யார் யோகத்தில் இருந்து ஆயுளை அதிகரித்து கொண்டு இருப்பார்களோ அவர்களுக்கு அவசியம் அதிகரிக்கும். தங்கள் சரீரத்தை மகிழ்ச்சியுடன் விட்டு விடுவார்கள். எப்படி பிரம்ம ஞானியின் உதாரணம் கூறுகிறார்கள், அவர்களும் பிரம்மத் திற்கு செல்வதற்காக அது போல குஷியுடன் சரீரம் விடுகிறார்கள். ஆனால் பிரம்மத்திற்கு யாரும் செல்வதும் இல்லை. பாவங்கள் அழிவதும் இல்லை. புனர் ஜென்மம் மீண்டும் இங்குதான் எடுக்கிறார்கள். பாவத்தை அழிப்பதற்கான யுக்தி தந்தை கூறுகிறார். என் ஒருவனை நினைவு செய்யுங்கள் மற்றும் வேறு யாரையும் நினைவு செய்யக் கூடாது. இலட்சுமி நாராயணரையும் நினைவு செய்யக் கூடாது. இந்த முயற்சி மூலம் நாம் இந்த பதவியை அடைந்து கொண்டிருக் கிறோம் என்று நீங்கள் அறிந்துள்ளீர்கள். சொர்க்கத்தின் ஸ்தாபனை ஆகிக் கொண்டிருக்கிறது. நாம் இந்த பதவியை அடைவதற்காக நம்பர் பிரகாரம் முயற்சி செய்து படித்துக் கொண்டிருக்கிறோம். அவர்களது நடக்கும் பரம்பரையானது தந்தை சங்கமத்தில் இப்பொழுதுதான் ஸ்தாபனை செய்துள்ளார். நீங்கள் சொற்பொழிவு கூட எவ்வாறு நிகழ்த்த வேண்டும் என்றால் அனைவருடைய புத்தியிலும் மிகச் சரியாக பதிந்து விட வேண்டும். இச்சமயம் நாம் ஈஸ்வரிய சம்பிரதாயத்தினராகவும் பிரஜா பிதா பிரம்மாவின் வாய்வம்சாவளி சகோதர சகோதரிகள் ஆவோம். நாம் ஆத்மாக்கள் அனைவரும் சகோதர சகோதரர்கள் ஆவோம். பிரம்மா குமார் குமாரி களின் திருமணம் ஆவதில்லை. இதுவும் தந்தை புரிய வைக்கிறார். எவ்வாறு விழுந்து விடுகிறார்கள். காமத்தீ எரிய வைக்கிறது. ஆனால் பயம் இருக்கும். ஒரு முறை நாம் விழுந்து விட்டோம் என்றால் செய்த சம்பாத்தியம் இல்லாமல் போய்விடும். காம விகாரத்தில் தோற்று விட்டார்கள் என்றால் பதவி மோசமாக ஆகி விடும். எவ்வளவு பெரிய சம்பாத்தியம் ஆகும்! மனிதர்கள் லட்சம், கோடி சம்பாதிக்கிறார்கள். இவை எல்லாமே இன்னும் சிறிது காலத்திற்குள் அழியப் போகிறது என்பது அவர்களுக்கு தெரியுமா என்ன? அணு குண்டுகள் தயாரிப்பவர்கள் இந்த உலகம் அழியபோகிறது யாரோ நம்மைத் தூண்டுகிறார்கள் நாம் தயாரித்துக் கொண்டே இருக்கிறோம் என்று அறிந்துள்ளார்கள். நல்லது.

இனிமையிலும் இனிமையான வெகுகாலம் காணாமல் போய் கண்டெடுத்த குழந்தைகளுக்கு தாய் தந்தை பாப்தாதாவின் அன்பு நினைவு மற்றும் காலை வணக்கம் ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1, ஞானத்தை உள்ளுக்குள் அரைக்க வேண்டும் அதாவது ஞான மனனம் செய்ய வேண்டும். தங்களுக்குள் ஞானத்தின் ஆன்மீக உரையாடல் நிகழ்த்தி பின் மற்றவர்களுக்குப் புரிய வைக்க வேண்டும். சோம்பலை விட்டு விட வேண்டும்.

2. தேகி அபிமானி (ஆத்ம அபிமானி நிலை) ஆகி மிகுந்த உல்லாசத்துடன் தந்தையை நினைவு செய்ய வேண்டும். நாம் தந்தையிடம் சோழியிலிருந்து வைரமாக ஆக வந்துள்ளோம் என்ற இதே போதையில் எப்பொழுதும் இருக்க வேண்டும். நாம் ஈஸ்வரிய மைந்தர்கள் ஆவோம்.

வரதானம் : ஞான சூரியன், ஞான சந்திரனுடன் இணைந்து இரவை பகலாக்கும் ஆன்மீக ஞான நட்சத்திரம் ஆகுக!

அந்த நட்சத்திரங்கள் எவ்வாறு இரவில் வெளிப்படுகின்றதோ அவ்வாறே ஆன்மீக ஞான நட்சத்திரமான நீங்கள் மின்னுகின்ற நட்சத்திரமாக பிரம்மாவின் இரவில் வெளிப்படுகின்றீர்கள். அந்த நட்சத்திரங்கள் கூட இரவை பகலாக்குவதில்லை ஆனால் ஞான சூரியன் மற்றும் ஞான சந்திரனுடன் இருக்கும் நீங்களோ இரவை பகலாக்குகின்றீர்கள். அவைகள் விண்ணின் நட்சத்திரம், நீங்களோ மண்ணில் வாழும் நட்சத்திரங்கள். அவை இயற்கையின் சக்தி, நீங்களோ பரமாத்மாவின் நட்சத்திரங்கள். அந்த நட்சத்திரம் யாவும் நட்சத்திர மண்டலத்தில் பல ரகமாக மின்னுகின்றன (பிரகாசமாக தோன்றும்) நீங்களோ பரமாத்மாவின் நட்சத்திர மண்டலத்தில் மின்னுகின்ற ஆன்மீக நட்சத்திரங்கள்.

சுலோகன்: சேவைக்கான வாய்ப்பு கிடைப்பதே ஆசீர்வாதங்களினால் பையை நிரம்புவதாகும்.